செ.வெ. எண்: 06 நாள்: 03.01.2012

# மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆவின் அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. வி. மூர்த்தி அவர்கள் தலைமையில் 03.01.2012 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி பால்வளத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பால்வளத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. மற்றும் பால்வளத்துறை ஆணையர் /ஆவின் நிர்வாக இயக்குநர் திரு ம.ரா. மோகன், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளின் பயனாகவும், மாண்புமிக முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில்கொண்டு கொள்முதல் விலை உயர்வு அளித்ததின் பயனாகவும், தற்பொழுது ஆவின் பால் கொள்முதல் சுமார் 1.50 இலட்சம் லிட்டர் உயர்ந்துள்ளது. அரசு நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு பால்வளத் திட்டங்களின் பயன்களை, பால் உற்பத்தியாளர்கள் அனைவரும் அறியும்வண்ணம் கூட்டுறவு ஒன்றிய பணியாளர்கள், அவர்களிடம் தெரிவித்து பால் கொள்முதலை நாளொன்றுக்கு 25 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு அதிகரிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

பால் உற்பத்தியாளர்களுக்கு 10 நாட்களுக்குள் பால் பணபட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்றும், செயலிழந்த சங்கங்களை மீண்டும் செயல்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும், அனைத்து ஒன்றியங்களும் இலாபகரமாக செயல்பட ஒன்றிய பொது மேலாளர்களும், மாவட்ட துணைப் பதிவாளர்கள் மற்றும் இணைய அதிகாரிகளும் இணைந்து செயல்படவேண்டும் என்றும், மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவும்பணிகள் உடனடியாக முடிக்கப்பட்டு செயல்படுத்த வேண்டும் மேலும், தேவைக்கேற்ப கூடுதல் மொத்த குளிர்விப்பான்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும், அரசின் பல்வேறு பால்வளத் திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் முடிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், பொது மேலாளர் (பணிக்குழு) திரு.பி. குமாராவேல் பாண்டியன், அனைத்து மாவட்ட ஆவின் பொது மேலாளர்கள், துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**